**நாகொட பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜுன் 14 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து நாகொட பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 779,771 தொகை குறைவாக மற்றும் வருட இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 969,783 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது வீதிவிளக்கு பராமரிப்பு தொடர்பாக கிடைக்க வேண்டிய ரூபா 113,760 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | பெற வேண்டிய கணக்கினை கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 30,000 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டின் போது ரூபா 46,520 இற்கான பண்டக் கொள்வனவு மீண்டுவரும் செலவுகள் என செலவுத் தலைப்புகளை மாற்றி பதிவுசெய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப் பட்டிருந்த 06 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் காட்டப்பட் டுள்ள மீதிகளிடையே ரூபா 49,944,320 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்டகாலமாக காணப்படும் சமமின்மை ஆதலால் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2008 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 18,315 தொகைக்கான தொங்கல் கணக்கு செலவு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அடுத்த வருடம் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(i) பெற வேண்டிய கணக்குகள்** | | |
| * மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,011,519 தொகைக்கான நிலுவை சந்தை வாடகை மீதியில் காணப்பட்ட 2016, 2017 ஆண்டுகளுக்குரிய ரூபா 1,073,519 தொகைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்னைய ஆண்டுகளில் இருந்து முன் கொண்டு வரப்படும் மீதிகளை அறவீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| * | நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வந்து காணப்படும் பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 5,060,809 தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்னைய ஆண்டுகளில் இருந்து முன் கொண்டு வரப்படும் மீதிகளை அறவீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | | | |
|---|---|---|---|
| * | கடன்கொடுத்தோர் மீதியில் பல வருட காலம் முதல் காணப்படும் கூட்டுப்பெறுமதி ரூபா 8,359,121 தொகைக்கான 04 கடன்மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்னைய ஆண்டுகளில் இருந்து முன் கொண்டு வரப் படும் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| * | 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதி தொடர்பான கூட்டுப்பெறுமதி ரூபா 1,368,296 தொகைக்கான செலுத்தவேண்டிய அரசாங்க உதவியினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்னைய ஆண்டுகளில் இருந்து முன் கொண்டு வரப் படும் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(உ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 166,180,709 தொகைக்கான 07 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா. | இணக்கமின்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 172(2) | 1,005,877 | 1999 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்தை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விரைவாக கணக்காய்வுக் கட்டணம் தீர்க்கப்பட வேண்டும். | பொதுக் கூட்ட தீர்மானத்தின் படி மாதாந்தம் ரூபா 10,000 வீதம் செலுத்துவேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,396,110 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,013,416 தொகை ஆகக் காணப்பட்டது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 64,000 | 65,812 | 4,093 | 336,386 | 65,000 | 65,553 | 21,320 | 274,666 |
| வாடகை | 3,498,380 | 3,531,600 | 2,823,700 | 2,533,969 | 3,512,720 | 3,497,720 | 2,520,948 | 1,841,037 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 450,000 | 1,028,522 | 906,072 | 122,450 | 600,000 | 763,018 | 763,018 | - |
| | 4,012,380 | 4,625,934 | 3,733,948 | 2,992,805 | 4,177,720 | 4,326,291 | 3,305,286 | 2,115,703 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஜனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 2,115,703 தொகையாக இருந்ததுடன், ஆண்டிற்கான சிட்டை யிடல் ரூபா 4,625,934 தொகையாக இருந்தது. அதன் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 6,741,637 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டின் போது அறவீடுகள் ரூபா 3,733,948 தொகையாகக் காணப்பட்ட மையால் வருமானம் அறவீடுகளின் முன்னேற்றம் 55 சதவீதமாக இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பாதீட்டின் பிரகாரம் வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1)(2) இன் பிரகாரம் வீதவரி வலயங்கள் வெளியிடப்பட்டு வீதவரி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அபிவிருத்தி செய்யப் பட்ட பிரதேசங்களில் இருந்து வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டும். | கணிப்பீடு ஒன்று மேற் கொண்டு வீதவரி தொடர்பாக இணங்கான நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய ஏக்கர் வரி ரூபா 340,478 தொகை எனினும் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 4,093 தொகையாக காணப்பட்டிருந்ததால், அறவீடுகள் 1.2 ஆகிய குறைந்த சதவீதத்தை கொண்டிருந்தது. | நிலுவை ஏக்கர் வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணிகள் துண்டுகளாக பிரிக்கப்பட்டிருப்பதனால் அவ்வாறு பிரிக்கப்பட்ட காணிகளை இனங்கண்டு அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.5 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 5,372,637 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் மீளாய்வாண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 2,823,783 தொகையாகக் காணப்பட்டமையால், அறவீடுகள 53 சதவீதமாகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப் பட வேண்டும். | நிலுவை வாடகை வருமானம் அறவீடு செயதல் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. |

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,120,229 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 5,060,809 தொகை பெறவேண்டி இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். | நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 214,120 தொகை முத்திரைக் கட்டணம் ரூபா 578,396 தொகை 2019 ஆண்டின் போது அறவீடு செய்யப் பட்டுள்ளது. மீதித் தொகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது 02 நிர்மாண வேலைகளுக்காக கிடைத்திருந்த ரூபா 55,000 தொகை குறிப்பிட்ட வேலைகளுக்காக பயன் படுத்தப்பட்டு இருக்கவில்லை. | சபையின் குறிக்கோள்களை நிறைவேற்றக் கூடிய விதமாக செயற்பட வேண்டும். | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகள் மூலம் சபையின் அதிகாரப் பிரசேத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் கான நீண்ட காலத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொது மக்களின் வாழ்க்கை நிலை உயர்த்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உடுகம எப்தொப்வத்த திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தின் குப்பை முகாமைத் துவத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 612,500 தொகை செலவிடப் பட்டு இருந்ததுடன், சேதனப் பசளை உற்பத்தியை சந்தைப்படுத்தியதன் மூலம் ரூபா 66,168 தொகை வருமானம் ஒன்று உழைத்திருந்தது. அவ்வாறாயினும் இந்த காணியின் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன், காணிக்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் ஒன்று பெற்றிருக்கவில்லை. | காணியின் உரிமையை சபைக்கு உரித்தாக்குதல் மற்றும் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிமையை உரித்தாக்கி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த துணை விதியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த 08 செய்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை செயற்படுத்தியிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு நேரொத்ததாக இருக்க வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட திடீர் அனர்த்த நிலைமையின் காரணமாக வெற்றிகரமாக செயற்படுத்த முடியாதிருந்தது. |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பதவியணித் திட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை மிகைத்த மிகை ஊழியர் எண்ணிக்கை 24 ஆகக் காணப்பட்ட துடன், வெற்றிடங்களின் எண்ணிக்கை 17 ஆகும். | பதவியணித் திட்டத்தின் படி செயற்பட வேண்டும். | மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | 2006 ஏப்ரல் 01 ஆம் திகதிய 28 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கைக்கு இணக்கம் இன்றி சேர்க்கப்பட்டிருந்த 07 ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,400,056 தொகை சம்பளம் மற்றும் படிகள் சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டு இருந்தது. | பதவியணித் திட்டத்தின் படி செயற்பட வேண்டும். | 25/2014 சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டு உள்ளது. |
| (iii) | அங்கீகரிக்கப்பட்ட முன்பள்ளி பெண் பொறுப்பாளர் பதவிகள் 03 எண்ணிக்கை காணப்பட்ட போதிலும் குறிப்பிட்ட சுற்றறிக்கையின் கீழ் 11 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர். அது தவிர ஒப்பந்த அடிப்படையில் மேலும் 03 பேர் சேர்க்கப் பட்டிருந்தமையால் முன்பள்ளி பெண் பொறுப்பாளர் பதவிகள் 14 மிகையாகக் காணப்பட்டது. | அங்கீகரிக்கப் பட்டுள்ளவாறு ஊழியர்கள் சேர்க்கப்பட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணி எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு கோரியுள்ளேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | சபைக்குச் சொந்தமான ஒரே ஒரு ஆயுர்வேத நிலையம் ஆகிய மாபலகம ஆயுர்வேத நிலையத்தில் மருந்து கலக்குனர் பதவி வெற்றிடமாக இருந்தது. | வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். | எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | சபை ஊழியர்களுக்கு அவர்களின் பதவிகளுக்கு ஏற்ற கடமைகளை விட உயர்ந்த பதவிகளின் கடமைகள் சாட்டப்பட்டிருந்தது. | பதவிக்கு உரிய கடமைசாட்டுதல் மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் அளிக்கப்பட வில்லை. |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

### (அ) வாகனங்களுக்காக வருமான அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதி அணவல் பெற்றிருக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1951 இன் 14 ஆம் இலக்க மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் வாகனம் ஒன்று பாதையில் ஓடுவதற்காக வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளல் காட்டாயமாக இருந்த போதிலும், சபைக்குச் சொந்தமான 04 வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரம் பெற்றிருக்காததுடன், காப்புறுதி அணவல் பெற்றுக் கொள்ளாமல் வாகனம் ஓடுவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. | வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி அணவல் பெற்றுக் கொள்ள வேண்டும். | 02 வாகனங்களுக்காக காப்புறுதி சான்றிதழ்கள் பெற்றிருந்தது. |

### (ஆ) கடைகள் வாடகைக்கு கொடுத்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மாபலகம பழைய 04 கடைகள் மற்றும் தல்கஸ்வல 05 கடைகள் சபைக்குச் சொந்தமாக காணப்பட்ட போதிலும், உரிமையை உறுதிப் படுத்துவதற்காக காணி உறுதிகள் காணப்படவில்லை. 06 கடைகளை வாடகைக்கு கொடுக்கும் போது வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | உரிய முறையில் வாடகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டு நிலுவைத் தொகை அறவிடப்பட வேண்டும். | 02 கடைகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதால் நிலுவைத் தொகையில் ஒரு பகுதி அறவிடப்பட்டு உள்ளது. |
| (ii) | மாபலகம வர்த்தக கட்டிடத் தொகுதியில் 02 கடைகளுக்காக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை. | உரிய முறையில் வாடகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டு | 02 கடைகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதால் நிலுவைத் |

| | | |
|---|---|---|
| | நிலுவைத் தொகை அறவிடப்பட வேண்டும். | தொகையில் ஒரு பகுதி அறவிடப்பட்டு உள்ளது. |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 வருமான விடயங்களில் பிரதி கூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 16,941,945 தொகை காணப்பட்டதுடன், அப்பெறுமதி 22 சதவீதம் முதல் 51 சதவீதத்திற்கு இடையில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (ஆ) | 04 செலவு விடயங்களின் கூட்டுத் தொகை ரூபா 13,666,010 தொகைக்கான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன், அவற்றின் பெறுமதி 30 சதவீதம் முதல் 91 சதவீதம் வரை இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்மாகாண) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/நா.ச.லே கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் நியமனம் செய்திருந்த போதிலும் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொண்டு அறிக்கை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |